## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.43/2015 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | **திரு. முத்துகிருஷ்ணன்** |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

2ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21th day of May 2025.

நான் நாச்சான்குளத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். எனது உறவினர். ஆஜர் 2ம் எதிரியை தெரியும். வழக்கின் மற்ற எதிரிகளை தெரியும், உறவினர்கள். தேதி ஞாபகமில்லை 2014ம் ஆண்டு 8வது மாதம் ஒரு நாள் கண்ணன் வீட்டிலிருந்தபோது மதியம் 1 மணியளவில் சரவணன், ஜானகி, அன்னகிளி ஆகியோர்கள் அ.சா.1 கண்ணனை அவரது வீட்டருகே வைத்து அவதுாறான வார்த்தைகளால் என்று ஏசினார்கள்.

முருகனிடம் சரவணன் ஏதோ பேசினார். அதை கண்ணன் கேட்டதால் சண்டை நடந்தது. சத்தம் கேட்டு நானும் மூக்கன் என்பவரும் பார்த்தோம். நானும் மூக்கனும் சண்டையை விலக்கிவிட்டோம். சரவணனும் அருமைதுரையும் அ.சா.1யிடம் நீ எங்களிடம் பிரச்சனை செய்தால் கழுத்தை அறுத்துவிடுவோம் என கூறினார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி அருமைதுரையை தாக்கி காயப்படுத்தியதாக மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் குற்ற எண் 77/2021 என்ற வழக்கு பதிவுசெய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால்

சரிதான். 1வது எதிரியின் மகன் செல்வராஜ் என்பவரை தாக்கியதாக செல்வராஜ் என்பவர் என் மீது கொடுத்த புகாரின் பேரில் மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் குற்ற எண் 80/2015 என்ற வழக்கு பதிவுசெய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் இல்லை. 2வது எதிரி சரவணன் என் மீது கொடுத்த புகாரில் மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் குற்ற எண் 135/2014 என்ற வழக்கு பதிவுசெய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் தெரியவில்லை.

வழக்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் சரவணன் வீட்டிற்கு நானும், சாட்சி கண்ணன், மகாலெட்சுமி, ஜெயா ஆகியோர் சென்று அசிங்கமா பேசி கொலைமிரட்டல் விடுத்ததாக வழக்கு பதிவுசெய்யபட்டு நானும் சாட்சி கண்ணனும் ரிமாண்ட் செய்யப்பட்டோம் என்றால் சரிதான். எனக்கும் 1வது எதிரி அருமைதுரைக்கும் தோட்டத்தை பாகுபடுத்துவது சம்பந்தமாக சொத்து பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். முருகனிடம் சரவணன் ஏதோ சொன்னதாக கண்ணன் எதிரி வீட்டிற்கு சென்று கேட்டதாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவம் முடிந்தபிறகு சம்பவயிடத்திற்கு பிற்பகல் 03.00 மணிக்கு வந்தார்கள். போலிஸார் வந்து என்னையும் கண்ணனையும் விசாரணை செய்தபிறகு காவல்நிலையத்திற்கு வரசொன்னார்கள் நாங்கள் காவல்நிலையத்திற்கு சென்றோம். நாங்கள் காவல்நிலையத்திற்கு செல்வதற்கு முன்பாக எதிரி சரவணன், அருமைதுரை காவல்நிலையத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான்.

போலிஸார் இருதரப்பினரையும் வைத்து சமாதானமாக போக சொன்னார்கள் என்றால் சரிதான். ஆனால் இருதரப்பினரும் சமாதானமாக போகவில்லை. வழக்கில் நான் சொல்வது போல எந்த சம்பவம் நடக்கவில்லை என்றும், நான் சாட்சி கண்ணன், மகாலெட்சுமி, ஜெயா ஆகியோர்கள் தகராறு செய்தோம் என்றும், அதன்பேரில் சரவணன் கொடுத்த புகாரில் எங்கள் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டது தெரிந்து நாங்கள் பொய்யாக எதிரிகள் மீது வழக்கு பதிவுசெய்தோம் என்றால் சரியல்ல.

காவல்நிலையத்தில் உள்ள செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்தோம் என்றால் சரியல்ல. எதிரிகளை பலமுறை தாக்கி, காயம் ஏற்படுத்தியதாகவும், எங்களுக்குள்ள மீது உள்ள செல்வாக்கை பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவுசெய்தோம் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.43/2015 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | **திரு. மூக்கன்** |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

2ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21th day of May 2025.

நான் நாச்சான்குளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் 2ம் எதிரியை தெரியும். வழக்கின் மற்ற எதிரிகளை தெரியும், பக்கத்துவீட்டுக்காரர்கள். 16.08.2014ம் தேதி மதியம் 01.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது சரவணன், ஜானகி, அன்னகிளி ஆகியோர்கள் அ.சா.1 கண்ணனை அவரது வீட்டருகே வைத்து தேவடியா புண்டாமவனே என்று ஏசினார்கள். கழிவுநீர் செல்லும்பாதையில் சரவணன் அடைத்ததால் குருநாதன் மகன் முருகனிடம் சரவணன் ஏதோ பேசினார். அதனால் சண்டை நடந்தது. சண்டை நடந்ததை என்னுடன் நிறைய நபர்கள் பார்த்தனார். அருமைதுரையும் அ.சா.1யை ஏசினார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது வீட்டிற்கு மேற்புறம் தான் எதிரியின் வீடு உள்ளது என்றால் சரிதான். எதிரியின் வீட்டின் கழிவுநீர் சாக்கடை எனது வீடு முன்பு செல்வதுதான் பிரச்சனை என்றால் சரிதான். அ.சா.1 கண்ணன் எனது பெரியப்பா மகன் என்றால் சரிதான். கழிவுநீர் பிரச்சனை குறித்து அ.சா.1 கண்ணனிடம் கூறினேன் என்றால் கூறவில்லை. சம்பவத்தின் போது

எத்தனை நபர்கள் கூடினார்கள் என்றால் 10 நபர்கள் சம்பவத்தை பார்த்திருப்பார்கள். சத்தம்கேட்கும்போது நான் வீட்டில் தான் இருந்தேன். சம்பவயிடத்திற்கு போகவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லபடும் நாளில் சுமார் மதியம் 02.30 மணியளவில் மூலைக்கரைப்பட்டி போலிஸார் வந்து அ.சா.1 கண்ணனையும், சாட்சி முத்துகிருஷ்ணனையும் கூட்டிசென்றார்கள் என்றால் சரிதான்.

நான் சொல்வது போல எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றும், அ.சா.1 எனது உறவினர் என்பதால் எனக்கும் எதிரிக்கும் உள்ள கழிவுநீர் பிரச்சனை சம்பந்தமாக எனக்கு ஆதரவாக அ.சா.1 கண்ணன், முத்துகிருஷ்ணன், மகாலெட்சுமி, ஜெயா ஆகியோர் எதிரி வீட்டிற்கு சென்று பிரச்சனை செய்தார்கள் என்றால் சரியல்ல. போலிஸார் எதிரிகளை அழைத்து சென்றபிறகு என்னை போலிஸார் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1 கண்ணன், சாட்சி முத்துகிருஷ்ணன் என்பவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.43/2015 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | **திரு. கண்ணன்** |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

2ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21th day of May 2025.

நான் நாச்சான்குளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் 2ம் எதிரியை தெரியும். வழக்கின் மற்ற எதிரிகளை தெரியும். என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர்கள். 16.08.2014ம் தேதி பிறபகல் 02.00 மணியளவில் நான் வீட்டிலிருக்கும்போது எதிரிகள் சரவணன், அன்னகிளி, ஜானகி ஆகியோர்கள் வீட்டிற்கு வந்து என்னை தேவடியா புண்டாமவனே என்று ஏசினார்கள். நீ எதற்கு நான் பேசியதை முருகனிடம் கேட்பாய் என கூறி கேட்டு என்னை வெட்டி விடுவேன் என மிரட்டினார். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் கழிவுநீர் செல்வது சம்பந்தமாக பிரச்சனை இருந்தது. சம்பவத்தை முத்துகிருஷ்ணன், மூக்கண் ஆகியோர்கள் பார்த்தார்கள். பின்னர் நான் காவல்நிலையத்திற்கு சென்று புகார் அளித்தேன். காட்டப்படும் புகார் மனு நான் அளித்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அதே தேதியில் நான் 2ம் எதிரி வீட்டிற்கு சென்று அவரை அடித்ததாக என் மீதும், முத்துகிருஷ்ணன், முத்துகிருஷ்ணன் மனைவி ஜெயா, என் மனைவி

மகாலெட்சுமி ஆகியோர் மீது விஜயநாராயணம் காவல்நிலைத்தில் மனு பதிவுசெய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக நான் புகார் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் என்னையும், சாட்சி முத்துகிருஷ்ணனையும் கைது செய்து சிறையில் அடைத்தார்கள் என்றால் சரிதான்.

இதற்கு முன்பு 2015ம் ஆண்டு என் அண்ணன் முத்துகுமார், என் அத்தான்கள் செல்லபாண்டி, ராஜ்குமார், மனைவி மகாலெட்சுமி , விஜயா ஆகியோர் 1ம் எதிரியை அடித்ததாக வழக்கு பதிவுசெய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் மூலைக்கரைப்பட்டி போலிஸார் மதியம் 1 மணியளவில் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். போலிஸார் சம்பவயிடத்திற்கு வந்து என்னையும், முத்துகிருஷ்ணன், எதிரி அருமைதுரை, 2ம் எதிரி சரவணன் ஆகியோரை காவல்நிலையத்திற்கு வரசொன்னார்கள் என்றால் சரிதான்.

காவல்நிலையத்திற்கு சென்றபிறகு போலிஸார் எதிரிகளிடம் கழிவுநீர் சம்பந்தமான பிரச்சனையில் சமதானமாக போக சொன்னார்கள் ஆனால் எதிரிகள் கேட்கவில்லை. 2ம் எதிரி சரவணன் காவல்துறையினரிடம் என் மீது வழக்கு பதிவுசெய்ய போவதாக பிடிவாதாகமா இருந்தார் என்றால் சரிதான். போலீஸ் சொல்லி கேட்காததால் எதிரிகள் அருமைதுரை, சரவணன், சாட்சி முத்துகிருஷ்ணன் மற்றும் என்னையும் கைது செய்து ரிமாண்ட் செய்தார்கள் என்றால் சரிதான். ரிமாண்ட் செய்வதற்கு முன்பாக போலிஸார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான்.

எதிரி சரவணனும் காவல்நிலையத்தில் என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான். போலிஸார் எழுதிய தாளில் தான் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். அதில் என்ன விபரம் எழுதியிருந்தது என எனக்கு தெரியாது. என் வீட்டிற்கு முன்புறம் தோட்டம் உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கு முன்பு உள்ள தோட்டத்தில் வைத்துதான் எதிரிகள் என்னை ஏசினார்கள் என்றால் சரிதான். இருதரப்பினரின் சத்தம் கேட்டு தெருவில் உள்ள மக்கள் ஓடிவந்தார்கள் என்றால் சரிதான். சத்தம் கேட்டு ஓடி வந்து முத்துகிருஷ்ணன், மூக்கண் ஆகியோர் என்ன சம்பவம் நடந்தது என விபரம் கேட்டு தெரிந்துகொண்டார்கள்.

முத்துகிருஷ்ணன் என்பவருக்கும் எதிரிகளுக்கும் பாரம்பரிய தோட்டம் சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லபடும் தேதியில் எதிரியும் முத்துகிருஷ்ணனும் பேசமாட்டார்கள் என்றால் சரிதான். முத்துகிருஷ்ணன் எங்கள் பகுதியில் பெரிய வியாபாரி என்றால் சரிதான். முத்துகிருஷ்ணன் பெரிய வியாபாரி என்பதால் காவல்நிலையத்திற்கு சென்று அறிமுகமானார். ஊர்பிரச்சனை சம்பந்தமாக காவல்நிலையத்தில் பேசி தீர்ப்பார் என்றால் சரிதான்.

நான் சொல்வது போல எதிரிகள் என்னை அசிங்கமாக பேசி மிரட்டியதாக செல்வது பொய் என்றால் சரியல்ல. கழிவுநீர் தேங்குவதில்

2வது எதிரிக்கும் மூக்கணுக்கும் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். முத்துகிருஷ்ணன் தூண்டுதலின் பேரில் நான், எனது மனைவி, முத்துகிருஷ்ணன் மனைவி ஜெயா ஆகியோர்கள் சரவணனின் வீட்டிற்கு சென்று அவரை அவதூறான வார்த்தையால் பேசினோம் என்றால் சரியல்ல. அதனால் 2ம் எதிரி சரவணன் எங்கள் நால்வர் மீது காவல்நிலையத்தில் குற்ற எண் 135/2014 படி வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் இருந்து தப்பிக்க எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதி, சொன்ன நேரத்தில் புகார் மனு அளிக்கப்படவில்லை என்றால் சரியல்ல.